

சென்னை மெட்ரோ ரெயிலுக்காக கோயம்பேடு - வடபழனி இடையே இருவழியிலும் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்டவாளம் பதிக்கப்பட்டுள்ளது. அதை படத்தில் காணலாம்.




சென்னை மெட்ரோ ரெயில் போக்குவரத்திற்காக நேரு பூங்காவில் அமைக்கப்பட்டு வரும் இரண்டு சுரங்கப் பாதைகளை படத்தில் காணலாம்.

### கோயம்பேடு - கிண்டி இடையே பறக்கும் பாதையில்

# மெட்ரோ ரெயிலுக்கு 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்டவாளம் தயார்

## சென்னையில் 3 இடங்களில் சுரங்க ரெயில் பாதை அமைக்கும் பணி தீவிரம்

சென்னை, ஜன.3-

மெட்ரோ ரெயிலுக்கு கோயம்பேடு - கிண்டி (சிட்கோ) இடையே பறக்கும் பாதையில் இரு வழியிலும் தலா 4 கிலோ மீட்டர் வீதம் மொத்தம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்டவாளம் பதிக்கப்பட்டுவிட்டது.

### மெட்ரோ ரெயில்

சென்னையில் மெட்ரோ ரெயில் திட்டம் ரூ.14 ஆயிரத்து 600 கோடியில் செயல்படுத்தப்படுகிறது. மொத்தம் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டு வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வண்ணாரப்பேட்டை - சென்னை விமான நிலையம் இடையே 23 கிலோ மீட்டர் நீளத்திற்கு முதல் வழித்தடம் அமைக்கப்படுகிறது. இதில், வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை 14.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதைக்காக தனித்தனியாக இரண்டு டனல்கள் (குகை) அமைப்பதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

### சுரங்க பாதை பணி தீவிரம்

இப்போது வண்ணாரப்பேட்டையில் இருந்து 2 டனல் போரிங் மிஷின்களைக் கொண்டு சுரங்கப்பாதை தோண்டப்படுகிறது. தனித்தனியாக இரண்டு சுரங்கம் அமைக்கப்படுகிறது. நேற்று வரை முதல் சுரங்கப்பாதையில் 317 மீட்டர் தூரத்திற்கும், 2-வது சுரங்கப்பாதையில் 64 மீட்டர் தூரத்திற்கும் சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு உள்ளது. வண்ணாரப்பேட்டையில் இருந்து சென்னை சென்டிரல் ரெயில் நிலையம் வரை சுரங்கப்பாதை அமைக்க திட்டமிடப்பட்டு இருக்கிறது.

சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்காவில் இருந்து அண்ணாசாலை வழியாக ஜெமினி மேம்பாலம் வரை சுரங்கப்பாதை தோண்டுவதற்கு 2 டனல் போரிங் மிஷின்களும், இந்தப் பூங்காவில் இருந்து சென்டிரல் ரெயில் நிலையம் சுரங்கப் பாதை தோண்டுவதற்கு ஒரு டனல் போரிங் மிஷினும் பயன்படுத்தப்படுகின்றன.

### மே தினப் பூங்காவில்...

தற்போது மே தின பூங்காவில் இருந்து அண்ணா சாலையை நோக்கி சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று வரை 13 மீட்டர் தூரத்திற்கு சுரங்கம் தோண்டப்பட்டு உள்ளது.

அதுபோல, வண்ணாரப்பேட்டை, மண்ணடி, ஐகோர்ட்டு (சென்டிரல்), ஓமந்தூரார் அரசினர் தோட்டம், எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு, அண்ணா மேம்பாலம் (ஜெமினி), தேனாம்பேட்டை, சேமியர்ஸ் சாலை, சைதாப்பேட்டை ஆகிய 10 இடங்களில் சுரங்க பாதை ரெயில் நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மெட்ரோ ரெயில் முதல் வழித்தடத்தில் 8.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதை அமைக்கப்படுகிறது. இந்தப் பாதையில் சின்ன மலை, கிண்டி (மெட்ரோ), ஆலந்தூர், ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் (ஓ.டி.ஏ.), மீனம்பாக்கம், விமான நிலையம் ஆகிய 6 இடங்களில் உலகத்தரத்தில் பறக்கும் பாதை ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

### 2-வது வழித்தடம்

சென்டிரல் - பரங்கிமலை இடையே 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரெயில் 2-வது வழித்தடம் அமைக்கப்படுகிறது. சென்டிரலில் இருந்து திருமங்கலம் வரை 9.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெறுகிறது.

தற்போது, நேரு பூங்காவில் இருந்து எழும்பூரை நோக்கி தனித்தனியாக இரண்டு சுரங்க பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நேற்று வரை முதல் சுரங்கப்பாதையில் 340 மீட்டர் தூரத்திற்கும், 2-வது சுரங்கப்பாதையில் 88 மீட்டர் தூரத்திற்கும் குகை அமைக்கப்பட்டு உள்ளது. ஷெனாய் நகரில் திரு.வி.க.பூங்கா இருந்த இடத்தில் இருந்து அண்ணாநகர் கிழக்கு நோக்கி சுரங்கப் பாதை தோண்டும் பணி ஒரு வாரத்திற்குள் தொடங்க இருக்கிறது. இந்த சுரங்கப் பாதை திருமங்கலம் வரை தோண்டப்பட உள்ளது.

### உலகத்தரத்தில் 32 ரெயில் நிலையங்கள்

சென்னை சென்டிரல், எழும்பூர், நேரு பூங்கா, கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, ஷெனாய் நகர், அண்ணாநகர் கிழக்கு, அண்ணாநகர் டவர், திருமங்கலம் ஆகிய 9 இடங்களில் சுரங்க பாதை ரெயில் நிலையங்கள் உலகத்தரத்தில் அமைக்கப்படுகின்றன.

மெட்ரோ ரெயில் 2-வது வழித்தடத்தில் 12.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதை அமைக்கப்படுகிறது. கோயம்பேடு, மத்திய புறநகர் பேருந்து நிலையம், அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர்-கே.கே.நகர், சிட்கோ (ஆலந்தூர்), பரங்கிமலை ஆகிய 7 இடங்களில் பறக்கும் பாதை ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இரண்டு வழித்தடங்களிலும் மொத்தம் 32 ரெயில் நிலையங்களுக்கான கட்டுமானப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

### 8 கிலோ மீட்டருக்கு தண்டவாளம் தயார்

கோயம்பேடு முதல் பரங்கிமலை வரையிலான 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதை அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதுவரை 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதைக்கான கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டது.

கோயம்பேடு - வடபழனி - கிண்டி (சிட்கோ) இடையே அமைக்கப்பட்டுள்ள பறக்கும் பாதையில் இருவழியிலும் தலா 4 கிலோ மீட்டர் வீதம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு (8 ஆயிரம் மீட்டர்) தண்டவாளம் பதிக்கப்பட்டு உள்ளது. மின்சார லைன் மற்றும் சிக்னல் அமைப்பதற்காக மின் கம்பங்களை நிர்மாணிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### இந்தாண்டு இறுதியில் சோதனை ஓட்டம்

இந்த ஆண்டு இறுதியில் கோயம்பேடு - பரங்கிமலை இடையே 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடைபெற உள்ளது. சென்னை மெட்ரோ ரெயிலுக்காக பிரேசில் நாட்டில் 168 பெட்டிகள் கொண்ட 42 ரெயில்கள் தயாராகி வருகின்றன. ஒரு மெட்ரோ ரெயிலில் 4 பெட்டிகள் இருக்கும். பிரேசில் நாட்டில் இருந்து ஒரு மெட்ரோ ரெயில் வரும் ஏப்ரல் மாதம் சென்னை வருகிறது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கோயம்பேடு - பரங்கிமலை இடையே பறக்கும் பாதையில் மெட்ரோ ரெயில்கள் ஓடும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.